# Proceedings of Jaffna Science Association

Volume: 25 No: 01

## Abstracts of Research Papers

Twenty-Fifth Annual Sessions
08 - 10 May 2018
Jaffna, Sri Lanka

Proceedings of Jaffna Science Association, Vol. 25, No. 1

© 2018 Jaffna Science Association (Guarantee) Limited

All rights reserved. Responsibility of the contents of the papers in this proceedings rests with the respective authors.

**ISSN: 1800-1289**
Jaffna Science Association is a Company Limited by Guarantee
Registration No: G/L/2427

# சிம்பாவேயின் முன்னாள் அதிபர் றொபேர்ட் முகாபேயும் அவரது இருவேறுபட்ட நிலைப்பாடுகளும்

க. அருந்தவராஜா, சி. மங்களரூபி

*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

சிம்பாவேயினது வரலாற்றில் விடுதலை வீரராகவும் அதேநேரத்தில் தனது பதவியின் இறுதிக் காலப்பகுதியில் அந்நாட்டு மக்களால் வெறுக்கப்பட்டதொரு சர்வாதிகாரியாகவும் பேசப்படுகின்ற ஒருவரென்றால் அவர் அந்நாட்டின் முன்னாள் அதிபரான றொபேர்ட் முகாபே என்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. வெள்ளையரினது இனஆதிக்க காலணித்துவ ஆட்சியிலிருந்து சிம்பாவேயினது விடுதலையின் பொருட்டு ஆயுதமேந்திப் போராடி அத்தேசத்திற்கு விடுதலையினைப் பெற்றுக்கொடுத்த ஒரு தலைவராகப் போற்றப்பட்டவர். சிம்பாவேயின் வளங்களைக் கொள்ளையடிக் கின்ற நோக்கத்துடன் நுழைந்த ஆங்கிலேயர்களை மாக்ஸியக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்ட சாதாரண ஆசிரியராக இருந்த முகாபே எதிர்த்துப் போராடினார். 1980 வரை வெள்ளையருக்கு எதிராகத் தனியானதொரு அமைப்பினை உருவாக்கி அதன் வழியாக நாட்டின் விடுதலையினைப் பெற்ற இவர் அந்நாட்டின் தலைவராக 2017வரை ஏறத்தாள 37 வருடங்கள் தொடர்ச்சியாகத் தன்னை நிலைப்படுத்திக்கொண்டார். ஆரம்பத்தில் தன்னை ஒரு ஜனநாயகவாதியாக உலகிற்கு இனங்காட்டிய முகாபே சிம்பாவே மக்களது தன்னிகரில்லாத் தலைவராக வலம் வந்தார். இருப்பினும் 1990களின் இறுதியிலிருந்து தனது ஆட்சியினைத் தக்கவைத்துக்கொள்ளுகின்ற நோக்கத்துடன் மக்களுக்குப் பல்வேறு வழிகளில் நெருக்குதல்களைக் கொடுக்க ஆரம்பித்தார். வெள்ளையரினை விரட்டியடிக்கின்ற நோக்குடன் முகாபே மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னணியில் மேற்குல முதலாளித்துவம் சிம்பாவே நாட்டிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட பல செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தன. இதனால் அந்நாட்டில் வறுமை, வேலையின்மை, விலை வீழ்ச்சி என்பன ஏற்பட்டு நாடு மோசமான பொருளாதார நிலையினை அடைய வேண்டியதாயிற்று. இறுதியில் முகாபேயினது மனைவியின் செல்வாக்கானது அரசியலில் படிப்படியாக நுழைய ஆரம்பித்தமையின் காரணமாக வீழ்ந்துகொண்டிருந்த அவரது செல்வாக்கினை மேலும் கேள்விக்குள்ளாக்கியது. பின்னாளில் இராணுவத்துடன் மக்களும்கூடவே இவரது நிர்வாகத்தினை வெறுக்க ஆரம்பித்தமையின் முடிவுதான் முகாபேயினுடைய ஆட்சிக்கவிழ்ப்பாகும். அவ்வகையில் அவரது பதவிக்காலத்தில் விடுதலை வீரராகவும் சர்வாதிகாரியாகவும் இருகோணங்களில் விமர்சிக்கப்பட்ட ஒருவராகவே முகாபே திகழ்ந்திருந்தார். அவ்வகையில் அவரது மேற்குறித்த இவ்விரு நிலைப்பாடுகளே ஆய்வினது பிரதான பிரச்சினையாக உள்ளது. வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் அமையப்பெற்றுள்ள இவ்வாய்வில் அன்னிய நாடொன்று பெருமளவிற்கு சமகால சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதனால் முதற்தரத் தரவுகளை தவிர்க்கப்பட்டுள்ளன. இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் பெருமளவிற்கு இரண்டாந்தரத் தரவுகளாகவும் அவதானிப்புக்கள், நேர்காணல்கள், கலந்தரையாடல்கள் சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகைகள், இணையத்தின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளாகவும் உள்ளன. ஆய்வினது நோக்கங்கள் பலவாக இருப்பினும் முகாபேயினது எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுரிய பின்னணியினை எடுத்துக்காட்டுவதே பிரதான நோக்கங்களிலொன்றாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** காலணித்துவ ஆட்சியாளர், இனவாத அரசியல், மேற்குலக முதலாளித்துவம், பொருளாதாரப் பின்னடைவு,